கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்

எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
OPTICIANS

SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED

580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 24 வெள்ளிக்கிழமை 07-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 160

# கொழும்பில் இரவு நேர ஊரடங்கு
# கண்ட இடத்தில் சுடுமாறு உத்தரவு

## ஹெலிகள் ரோந்து

கொழும்பு, மே 7

ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து, கலவரம் எதுவும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, அரசாங்கம் கொழும்பில் இரவு நேர ஊரடங்கை நடைமுறைப்படுத்தி உள்ளது

குழப்பத்தில் ஈடுபடுவோரைக் கண்ட இடத்தில் சுடுமாறும் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரிலும், அதன் புறநகரப் பகுதிகளிலும் பாதுகாப்பு நிலைவைக் கண்காணிப்பதற்காக இராணுவ ஹெலிக்கொப்டர்கள் ரோந்துப் பணியில் நேற்று நண்பகல் தொடக்கம் ஈடுபடுத்

( 6-ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஜனாதிபதி தெரிவு இன்று நாடாளுமன்றில்

கொழும்பு, மே 7

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றம் இன்று காலை 9 மணிக்குக் கூடுகிறது.

புதிய ஜனாதிபதி பதவிக்கான வேட்பு மனுக்களை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அப்போது ஏற்றுக் கொள்வார்.

இன்றைய கூட்டத்தின் போது ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டால் — அதன் பின்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்

6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கிரியைகளுக்கு ஜே. ஆர். வரவில்லை

கொழும்பு, மே 7

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை சுதந்திரசதுக்கத்தில் நடந்தபோது. அதில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கலந்து கொள்ளவில்லை.

உடல்நலக் குறைவு காரணமாக அவர் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது இரங்கலுரையை ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா வாசித்தார். (இ-எ)

## கொலையுண்ட பிரேமதாஸ:
## பாதுகாப்பு ஆலோசனையை மீறி பேரணியை நடத்தினார்

லண்டன், மே 7

கடந்த சனிக்கிழமை மே தினப் பேரணியை தலைமை வகித்து நடத்திச் செல்ல வேண்டாம் என்று ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அவரது மெய்ப்பாதுகாவலர்கள் ஆலோசனை கூறியிருந்தனர் என்றும் —

ஆனால் அதனை மீறி பிரேமதாஸ பேரணியை நடத்திச் சென்றார் என்றும் பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

தனக்கு ஆலோசனை தெரிவித்த பாதுகாவலர்களுக்கு — ''நான் மக்கள் மத்தியில் பாதுகாப்பாக இருப்பேன்'' என்று பிரேமதாஸ பதிலளித்தார் என்றும் —

அதனால் மக்களின் தலைவர் என்று வர்ணிக்கப்படும் அவர் மக்கள் மத்தியிலேயே உயிரிழந்தார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (த-எ)

## பிரேமாவின் இறுதி நாள்


*மே தினப் பேரணியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலியான ஜனாதிபதி பிரேமதாஸாவின் சடலம், குண்டு வெடிப்பினால் சிதறிக்கிடப்பதை அருகில் உள்ள படத்தில் காணலாம்.*

*குண்டு வெடிப்புக்குச் சற்று முன்னர் ஆதரவாளர்களிடையே கம்பீரமாக நடந்து செல்லும் ஜனாதிபதி பிரேமதாஸாவை கீழ்ப் படத்திலும் —*

*குண்டு வெடித்ததும் அவரது உடல் மற்றைய இருவரின் சடலங்களுக்கு அருகில் சிதறிக்கிடப்பதை கீழே வலதுபுறப் படத்திலும் காணலாம்.*

*தற்கொலைத் தாக்குதல் நபர் குண்டுடன் எடுத்து வந்ததாகக் கருதப்பட்ட சைக்கிளும் கீழே வலதுபுறப் படத்தில் காணப்படுகிறது, சைக்கிளுக்கு அருகே சிலரின் கை, கால் துண்டங்கள் காணப்படுகின்றன,*

*ஆதரவாளர்கள் மத்தியில் நடந்து செல்லும்போது ஜனாதிபதி பிரேமதாஸா கையில் கட்டியிருந்த மணிக்கூடு அவரின் சிதைவுற்ற சடலத்தின் இரு படங்களிலும் கைத் துண்டங்களில் அப்படியே இருப்பதைக் காணலாம். பிரேமதாஸாவின் சடலத்தை அடையாளம் காண்பதற்கு இந்த மணிக்கூடு முக்கியமாக உதவியது என்பது குறிப்பிடத்தக்கது.*







## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தியாவெட்டுவான், மயிலங்கரைச்சை என்னும் இடங்கள் கடந்த செவ்வாயன்று இராணுவத்தினராலும் தேசவிரோதிகளாலும் சுற்றிவளைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுற்றிவளைப்பின் போது பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

# அல்லிப்பளை அம்மன் கோயில் மீது புக்காரா விமானங்கள் குண்டு வீச்சு!

## முன் மண்டபம், மடப்பள்ளி, கொடித்தம்பம் பெரும் சேதம்

கொடிகாமம், மே 7

பளைப் பகுதியில் — அல்லிப்பளை அறத்தி அம்மன் கோயில் மீது நேற்றுக்காலை இரு 'புக்காரா' விமானங்கள் கண்மூடித்தனமாக குண்டுகளை வீசின.

நேற்றுக் காலை 6-15 மணியளவில் திடீரென வந்த இரு 'புக்காரா' விமானங்கள் பளைப் பிரதேசத்தை வட்டமிட்டு அல்லிப்பளைப் பகுதியில் அடுத்தடுத்து குண்டுகளை வீசின.

இந்தத் தாக்குதலினால் கோயில் மடப்பள்ளியும், முன் மண்டபமும் முற்றாகச் சேதமடைந்தன. ஆலய முன்றலில் குண்டு விழுந்து வெடித்ததில் அங்கு 20 அடி நீளமும் 15 அடி ஆழமும் கொண்ட பாரிய குழி ஒன்று ஏற்பட்டது. அதில் தற்சமயம் நீர் நிரம்பி குளம் போல காட்சியளிக்கிறது.

கோயில் குளத்தில் இரு குண்டுகள் வீழ்ந்தபோதிலும் ஒரு குண்டு வெடிக்கவில்லை. மற்றக் குண்டு வெடித்ததில் குளத்திலிருந்து 30 அடிக்கு அப்பால் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

கோயிலுக்கு பின்புறம் தென்னங்காணி ஒன்றில் வீழ்ந்த குண்டினால் பல தென்னைமரங்கள் முறிந்து நிர்நாசமாகின. ஐந்துக்கு மேற்பட்ட மரங்கள் அடியோடு பெயர்ந்துவிட்டன. ஆலயச் சுற்றாடலில் நின்ற பல மரங்களும் முறிந்து காணப்படுகின்றன.

குண்டு வீச்சின்போது அள்ளுண்டு வீசப்பட்ட மண்ணால் உடைந்த கொடி[illegible]

கோயிலுக்குரிய [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்கரையில் 4 சடலங்கள் ஒதுங்கின!

தென்மராட்சி, மே 7

கிளாலிப் பகுதி கடற்கரையில் நேற்று முன்தினம் புதன்கிழமை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நான்கு ஆண்களது சடலங்கள் அழுகிய நிலையில் கரை ஒதுங்கின.

முதலில் காலை வேளையில் இரு சடலங்களும், பின்னர் மாலை 5.30 மணியளவில் மேலும் இரு சடலங்களும் கரை ஒதுங்கின.

நான்கு சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் பளை காவல்துறையினரால் அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டன. (ஒ-117)

# கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் நேற்று பிரேமாவின் இறுதிச் சடங்கு

## மருமகன் சிதைக்கு தீமூட்டினார்

கொழும்பு, மே 7

தலைநகர் கொழும்பில் நேற்று கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி பிரேமதாசவின் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நண்பகல் சுமார் 12-15 மணிக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பமானது.

ஊர்வலத்தின் முன்னால் ஜனாதிபதி கல்வி பயின்ற சென். ஜோசப் கல்லூரி மாணவர்கள் சாரித்த இயக்கத்தினர், அணி வகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து ஐ. தே. க பிரமுகர்கள், அமைச்சர்கள் எம். பிக்கள், உறுப்பினர்கள் ஆகியோர் சென்றனர். அவர்களுக்கு முன்னால் பிரேமாவின் மிகப்பெரிய உருவப் படம் ஒன்று எடுத்துச் செல்லப்பட்டது.

சுமார் ஐந்து மைல் நீளமான இறுதி ஊர்வலம் ஐந்து மணி நேரத்தின் பின்னர் இறுதிச் சடங்கு நடைபெறவிருந்த சுதந்திர சதுக்கத்தைச் சென்றடைந்தது.

தலைநகர் முழுவதும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொலிஸாருடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பாதுகாப்புக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 7

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## சுந்தரருக்கு இன்று மணிவிழா

யாழ்ப்பாணம், மே, 7

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சு[illegible]த்தின் மணிவிழா நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 5-30 மணியளவில் இணுவில் கந்தசாமி கோவிலில் சிறப்பாக நடைபெறவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் சமயப் பெரியார்கள், அறிஞர்கள், கல்விமான்கள், அபி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் வெல்லும் நோக்குடனேயே பிரேமதாச செயற்பட்டார்

## பி. பி. ஸிக்கு ஜே. ஆர். பேட்டி

கொழும்பு, மே 7

தற்போது நடைபெற்று வரும் வடக்கு — கிழக்கு யுத்தத்தில் நாம் வெற்றியீட்ட வேண்டும். அதன் படி ஜனாதிபதி பிரேமதாசா நடந்து கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பி. பி. ஸி, செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

பி. பி. ஸி செய்தியாளரின் கேள்விகளும் ஜே, ஆரின் பதில்களும் வருமாறு :—

கேள்வி; ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டார். அதற்கு முன்னர் பிரபல எதிர்க்கட்சித் தலைவர் அத்துலத் முதலி கொல்லப்பட்டார். படுகொலை செய்வதன் மூலம் அரசியல் நடத்தும் இந்த முறையைத் தடுப்பதற்கு என்ன செய்ய முடியும்?

ஜே. ஆர்: தலைவர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நடப்பதைப் பற்றி கவனிக்காமல் ஜனநாயக நடைமுறையைப் பாதுகாக்க வேண்டும். அரசியலமைப்பு இதற்கான நடைமுறையைத் தந்துள்ளது. புதிய பதில் ஜனாதிபதியும் அரசினரும் அரசமைப்பில் கூறப்பட்ட ஜனநாயக சுதந்திரங்களை பாதுகாக்க உறுதி பூண்டுள்ளனர்.

கேள்வி! ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆமாம் போடுபவராக விஜேதுங்கா இருந்து வந்தார் என்றே அவர் பொதுவாக கருதப்பட்டார். ஆகவே இவரால் ஜனாதிபதி பதவியை வகிக்க முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ஜே. ஆர்.: அரசமைப்பில் இருந்து அதிகாரம் பிறக்கின்றது.

ஜனாதிபதியாக எவர் வந்தாலும் அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்த முடியும். ஆகவே தனது வழியில் அதிகாரத்தை செயல்படுவதற்கு விஜேதுங்காவுக்கு போதுமான அனுபவமும் திறமையும் உள்ளன என நான் எண்ணுகின்றேன்.

கேள்வி: தனிப்பட்ட ரீதியான ஆளுமையும் வேண்டுமே. அதனை விஜேதுங்காவிடம் மக்கள் எதிர்பார்க்கலாமா?

ஜே. ஆர் : அது வாக்காளர் மத்தியில் செல்வாக்கைப் பிரயோகிக்க உதவலாம். ஆனால் அரசின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை அரசமைப்புத்தான் கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும்.

கேள்வி: ஜனாதிபதி பிரேமதாசா தமது அரசியல் வாழ்வில் ஆற்றிய முக்கிய பங்கு என்ன?

ஜே ஆர்.: பிரேமதாசாவின் பிரதான பங்கு உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவியது. ஒன்றுமே இல்லாதவர்களுக்கும், ஒன்றுமே செய்ய முடியாதவர்களுக்கும் அவர் உதவினார்.

கேள்வி: பிரேமதாசா வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வந்தார். இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ஜே. ஆர் : நல்லது ஒரு யுத்தத்தில் மூர்க்கத்தனமாக இருப்பதா, இல்லையா என்பதல்ல பிரச்சினை என்று எண்ணுகின்றேன். நாம் யுத்தத்தில வெற்றியீட்ட வேண்டும். அதன்படியே அவர் நடந்து கொண்டார்.

# பெண் ராணுவச் சிப்பாய் வவுனியாவில் கடத்தல்

கொழும்பு, மே 7

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பெண்கள் பிரிவைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் வவுனியா பகுதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இனந்தெரியாத ஆயுதபாணிகளால் அவர் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இவர் கடத்தப்பட்டதை கேள்வியுற்ற அவரது காதலரான ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஜே எல்.ஏ. அஜித் பாலித்த விஜேகுணசேகர (26 வயது) என்ற இவர் களுத்துறை, பதுகமயைச் சேர்ந்தவர்.

மரண விசாரணையில் தற்கொலை எனத் தெரிவிக்கப்பட்டது இறந்தவரின் தந்தை சாட்சியமளித்தார். (ஒ)

# விளையாட்டு நிகழ்வுகள்

''ஷப்றா'' கிண்ணத்துக்காக ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இன்று ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

o o o

''டொனால்ட் கணேஷ் நமார்'' ஞாபகார்த்தமாக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுபடுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் ஒன்று நாளை நடைபெறுகிறது.

நாளை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதும்.

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஒங்கரன் விளையாட்டுக் கழகம் சமூக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் அடைக்கல அன்னை வி க. அணியை எதிர்த்து கொய்யாத்தோட்டம் வி. க. அணி இன்று மோதும்.

இந்த இரண்டாம் சுற்று ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இளவாலை யங் ஹென்றீஸ் வி. க. அணியை எதிர்த்து உரும்பராய் திருக்குமரன் அணி மோதும் இந்த ஆட்டம் இன்று மாலை கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும்.

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று மாலை சனசமூக மைதானத்தில் ஆரம்பமாகுகின்றது. இன்றைய ஆட்டத்தில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. அணி எதிர் ஸ்ரீதாஸ் வி. க. அணி.

★ மாலை 4 30 மணி:- மகாத்மா வி. க. அணி எதிர் அறிவொளி வி. க. அணி


தலையாழி கொக்குவில்
இந்திரா சனசமூக நிலைய
வளர்ச்சிக்காக

★ நிதியுதவி நிகழ்ச்சி ★

பொன் மாலைப் பொழுது

● ''பரத கலாகேந்திர'' மாணவர் அளிக்கும்
பரத நாட்டியம்
● ''யாழ். சோட்டோக்கான் கராத்தே சங்கம்'' வழங்கும்
கராத்தே கண்காட்சி
ராஜன்ஸ் இசைக் குழுவினரின்
★ இன்னிசை வார்ப்புகள் ★

இடம்: கொக்குவில் இந்து கல்லூரி அரங்கம்
காலம்: 09 - 05 1993 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி

நிகழ்ச்சி சிறக்க வாழ்த்துபவர்கள்
க. வேலாயுதம்
ஆசிரியர், தலையாழி. (25557)



மணிவிழா நாயகர்

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்
''செயல் வீரர்''
திரு. இரா. சுந்தரலிங்கம்

பல்லாண்டு வாழ்ந்து கல்விச் சமூகத்திற்கு மேலும் பணியாற்ற மனமார வாழ்த்துகிறோம்

அதிபர், விரிவுரையாளர்கள் ஊழியர்கள்,
பயிற்சி ஆசிரியர்கள்.
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி (25558)


# போரினால் உருக்குலைந்த நாட்டை பிரேமா விட்டுச் சென்றுள்ளார்

## பி. பி. ஸியின் கருத்து

கொழும்பு, மே 7

போரினால் உருக்குலைந்து வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் நாட்டை பிரேமதாசா விட்டுச் சென்றிருக்கிறார்.

— பி. பி. ஸி. இவ்வாறு கருத்துத் தெரிவித்தது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கைகள் எழுந்தும் கூட வடக்கிலும் கிழக்கிலும் உருவாகியுள்ள பிரச்சினைக்கு அவரால் தீர்வு காண முடியவில்லை.

பிரேமதாசாவின் சர்வாதிகார ஆட்சியைப் பார்க்கும் போது அவரது மரணத்தின் பின் ஆட்சி மாற்றம் சுமுகமாக நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## இருவர் பதவி விலகுவதால்

# இராணுவத்துக்கு இக்கட்டானநிலை

கொழும்பு மே 7

இராணுவ சேவையில் 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவசாலிகளான இரு மேஜர் ஜெனரல்கள் பதவியில் இருந்து வெளியேறுவது இன்றைய காலகட்டத்தில் பெரும் இக்கட்டான நிலையைத் தோற்றுவிக்கும்

இராணுவ உயர் அதிகாரிகள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கே அவர்கள் இந்த கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இராணுவ தொண்டர் படைப்பிரிவுகளில் உள்ள 90 ஆயிரம் படையினருக்கு பொறுப்பான அதிகாரிகளாக ஐந்து மேஜர் ஜெனரல்கள் கடமையாற்றி வந்தனர் என்பதும் —

அவர்களில் இரண்டாம் இடத்தில் உள்ள மேஜர் ஜெனரல் திலக் பரணகமவும், மூன்றாம் இடத்தில் உள்ள மேஜர் ஜெனரல் சி. கே. அபேயரத்தினாவும் இராணுவ சேவையை விட்டுச் செல்வதும் — தெரிந்தவையே.

அடுத்த மாதத்தில் இருந்து இவர்கள் சேவையில் இருந்து விலகிச் செல்வதால் பெரும் இக்கட்டான நிலை ஏற்படும் என இராணுவ உயர் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவர்களின் இழப்பை எப்படி அரசாங்கம் சரிக்கட்டப் போகிறது என்பதை முழு ' ' ஆ ப ் படையினருமே எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றன என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# எதிர்க்கட்சியினர் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு, மே 7

ஜனாதிபதியின் இறுதிக் கிரியைகளில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

இறுதி ஊர்வல ரூபவாஹினி ஒளிபரப்பில் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் எவரும் தென்படவில்லை. ஒ)

# ஐரோப்பிய சமூகம் கண்டனம்

கொழும்பு, மே 7

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஐரோப்பிய சமூகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பிரஸ்ஸல்ஸில் நேற்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளும்படி நாட்டின் அனைத்துக் கட்சிகளுக்கும் ஐரோப்பிய சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-எ)

# 2ஆவது தடவை சேதமுற்ற வீடுகள் விவரம் சேகரிப்பு

## முன்னேற்பாட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமுற்ற வீடுகளைத் திருத்த புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணக் கடன் பெற்றவர்கள் —

அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட வீடுகள் தற்போது மீண்டும் இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்திருப்பின் அவை பற்றிய விவரங்களை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அறிவிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் உள்ள வீடமைப்புஉத்தியோகத்தர் ஊடாக அவர்கள் இதனை அறிவிக்கலாம்.

இதேவேளை —

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வேறு திட்டங்களின்கீழ் கடன்களைப் பெற்று நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் சேதமடைந்திருப்பின் அவை குறித்தும் வீடமைப்பு உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிவாரணப் பணிகளை இலகுவாக்கும் ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது (த 162)

# சேமிப்பை ஊக்குவிக்க விளையாட்டு கழகம் முயற்சி

## 100 பேருக்கு சேமிப்புப் புத்தகங்கள்

ராஜன் விளையாட்டுக் கழகப் பொதுப்பணி மன்றம் கடந்த சித்திரைப் புத்தாண்டுத் தினத்தில் நூறு உறுப்பினர்களின் பெயர்களில் தனித்தனியாக தேசிய சேமிப்பு வங்கிக் கணக்குகளைத் தொடங்கி சேமிப்புப் புத்தகங்களை உரியவர்களுக்கு வழங்கியது.

அராலி மேற்குக் கிராமத்தில், வளர்ச்சி குன்றிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ராஜன் விளையாட்டுக்கழகப் பொதுப் பணி மன்றம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் நடைபெற்ற சேமிப்புப் புத்தகங்களை வழங்கும் வைபவத்துக்கு அராலி மேற்கு கிராம உத்தியோகத்தர் திரு சி. சிங்கராசா தலைமை வகித்தார். செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்குப் பிரிவுத் தலைவர் திரு. நா குகராசா, யாழ் இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் திரு வ. சிவலோகநாதன், வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திரு வி. சிவஞானபோதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விழாவை அராலி மேற்கு கடற்புலிகளின் அராலிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பாலதமார் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார். (க-12-161)

# முதலாவது பெண் சாரதி

சென்னை, மே 7

இரண்டு குழந்தைகளுக்கு தாயான திருமதி வசந்தகுமாரி தமிழகத்தின் முதலாவது பெண் பஸ் சாரதியாக நியமனம் பெற்றுள்ளார். (இ-எ)

# பட்டதாரி மாணவர் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

## யாழ். விஞ்ஞான சங்கத் தலைவர் உரை

''பட்டதாரி மாணவர்களின் ஆராய்ச்சி வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இது மாணவர்களினதும் தேசத்தினதும் எதிர்காலத்துக்கு அவசியமானது.''

21ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் நடைபெற்ற யாழ்ப்பாண விஞ்ஞான மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியில் புதியதலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் ''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில பட்டதாரி மாணவர்களின் ஆராய்ச்சி'' என்ற பொருள்பற்றி சிறப்புரை நிகழ்த்தியபோது இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் 23ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு நடைபெற்ற இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்

உபவேந்தர் அ. துரைராசா உட்படப் பல பேராசிரியர்கள் விசேஷ அங்கி அணிந்து மேடையில் பிரசன்னமாய் இருந்தார்கள்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் மேலும் பேசுகையில், ''உயர் கல்விப் பீடமான இப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நடவடிக்கை இன்றியமையாதது பல்கலைக்கழக ஆசிரியர்களின்போதனையில் ஆராய்ச்சி நடவடிக்கை தீர்க்கமான இடத்தைப் பெற வேண்டும்'' என்று கூறினார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நன்றியுரை கூறினார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்திய வினா-விடைப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு இக் கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. (க)

# தொழில் நுட்ப பயிற்சி அறிவை இங்கேயே பயன்படுத்த வேண்டும்

## பேராயர் அம்பலவாணர் வேண்டுகோள்

வட்டுக்கோட்டை மே 7

''தொழில் நுட்பப் பயிற்சிகளைப் பெற்ற மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றபின் அரபு நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்லும் பரிதாபகரமான நிலைமையை நாம் காண்கின்றோம். அவர்கள் எமது மண்ணில் தமது தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி தமிழ்மக்களுக்காக உழைக்க வேண்டும்''

தென் இந்தியத் திருச்சபை யாழ். பேராயர் அருட்திரு டி. ஜே. அம்பலவாணர் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றால் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசிய போது இவ்வாறு கூறினார்.

விழா வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியில் திரு. எம். [illegible] தலைமையில் நடைபெற்றது. பேராயர் [illegible] அந்நிய நாட்டு மோகம் எமக்கு எந்த ஈடேற்றத்தையும் அளிக்கமாட்டாது என்று கூறினார்.

விழாவில் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி விரிவுரையாளர் திரு. கந்தசாமி, தொழில்நுட்பக் கல்லூரி மாணவத் தலைவர் செல்வன் கே. மயூரன், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. தேவராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

இறுதியில், தொழில்நுட்பக் கல்லூரியின் 20 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டிய மதிய போசனமும் இடம் பெற்றது. (க-161)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தில்லையமமா தாமோதரம்பிள்ளை

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த திருமதி தில்லையம்மா தாமோதரம்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், கனகேஸ்வரி, யோகநாதன் (Engiish Tuition master), அழகேஸ்வரி, கயிலைநாதன் (France), இராமநாதன் (Canada), தில்லைநாதன் (ஒப்பந்தகாரர்), சர்வேஸ்வரி, அற்புதநாதன் France) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரத்தினம் (இளைப்பாறிய இலிகிதர்), காந்திமதி, செல்வராசா (France), அன்னலட்சுமி (France), இராஜேஸ்வரி (Canada), சிவபாதம் (ஆசிரியர்), கமலாசனி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், குகபாலன், சிவரூபி சந்திரவதனா, சாந்தினி, ஜெயந்தினி (யாழ். பல்கலைக்கழகம்), சுதர்சினி, தனுசாந்தி, குகதீபன், ரமணன், யதீஸ் வசந், தர்மினி, சுசுந்தன், காயத்திரி, துஷ்யந்தன், கிருபா, ஜனகன், வைதேகி, ஜனார்த்தனன், தங்கராசா, அமிர்தநாயகி, புஸ்பராசா, கமலேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிலானி, வைஷ்ணவி, சுஜீவன், சாம்பவி, ஐஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற கண்ணையா, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7-5-93) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
தா. யோகநாதன் (மகன்)
சிவலிங்கப்புளியடி.
(25559)

## சின்னத்தம்பி ஈஸ்வரானந்தம்

[முன்னாள் யாழ் சிறைச்சாலை மேற்பார்வையாளர்]

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஈஸ்வரானந்தம் 6 - 5 - 93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமியின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், விஜயேந்திரன் (சுவீடன்), ஜமுனா சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதா (சுவீடன்), குகசீலன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரபியின் அன்பு பேரனும், திருமதி பத்மாவதி முருகேசு, காலஞ்சென்ற நடராசா, திருமதி மங்கையர்க்கரசி பாலசிங்கம், செல்வானந்தன், காலஞ்சென்ற விஜயானந்தன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திருமதி ரத்தினம் சுப்பிரமணியம், காலஞ்சென்ற கந்தையா, திருமதி மகேஸ்வரி தில்லைநாதன், வன்னியசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 7-5-93பிற்பகல் 2 மணியளவில் அவரது உடுவில் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சிவபாக்கியம் (மனைவி)
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.
(25558)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்

**07–05–1993**

## சுந்தரத் தமிழ் வல்ல சுந்தரனார்

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரை ஈன்றுவந்து அளித்தது இணுவையம்பதி. அன்று தொட்டுஇன்றுவரை இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் வளர்ப்பதோடு சைவ மணங்கமழும் புண்ணிய பூமியாகவும் விளங்குவது இணுவையூர். அது யாழ்ப்பாணத்தில் ஒரு திருவாரூர் என்றால் மிகையாகாது இவ்வூர் தந்த முத்துக்களுள் ஒருவரே மணிவிழாக் காணும் உயர்திரு இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள்.

1932 – 05 – 15 ஆம் திகதி தோன்றிய இவர் தமது ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். இடைநிலைக் கல்வியினை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்று 1953ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த) விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்றார் பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு 1959 ஆம் ஆண்டில் விஞ்ஞானமாணிப் பட்டதாரியானார். அத்துடன் சென்னை அடையாறு கலாஷேத்திரத்தில் நடனம்பயின்று டிப்புளோமா பட்டமும் பெற்றார். இலங்கை திரும்பிய இவர் ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்தார் புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி என்பவற்றில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றி வரும்போதே 1962 ஆம் ஆண்டு லண்டன் கலைமாணிப் பட்டத்தினையும் பெற்றார்.



இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சேர்ந்த இவர் பரீட்சைத் திணைக்களத்தில் பரீட்சை அத்தியட்சகராகவும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பிரதம பதிப்பாசிரியராகவும் கடமையாற்றினார். பின்பு யாழ். கல்வித் திணைக்களத்தில் 1984—1985இல் பிரதம கல்வி அதிகாரியாக கடமையாற்றி 1986இல் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு ஏககாலத்தில் கல்விப் பணிப்பாளராக 1987 லும், வவுனியா கிளிநொச்சிக்கு ஏககாலத்தில் கல்விப் பணிப்பாளராக 1988லும், 1989இல் கல்விப் பணிப்பாளராக மன்னாரிலும் கடமையாற்றிய பின்னர் 1990இல் யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றினார் அறுபது வயது பூர்த்தி அடைந்த பின் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்தும் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

மணிவிழாக் காணும் இப்பெரியார் சுருவிலே திருவுடையராக இருந்தமையால் முத்தமிழிலும் வல்லராகி, பன்மொழிகளையும் கற்றவராய், கல்வித்துறையில் பலநிலைப் பதவிகளையும் திறம்பட வகித்து இந்நாள்வரை யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுவது போற்றுதற்குரியது

சுந்தரத்தமிழ்வல்ல சுந்தரனார் இனிமையாகவும், நகைச்சுவையுடன் ஆளுமையாகவும் பேசவல்லவர், விருந்தோம்பி வேளாண்மை செய்பவர், ஊருணி நீர் நிறைந்தனைய திருவுடைப் பேரறிவாளன்.

தம் ஊர் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணமும், இணுவையூர்ச் சிறார்களுக்கு உயர் கல்வி பெறத் தம்மூர்ச் சூழல் மத்தியிலேயே கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற அவாவினாலும் அவ்வூரில் ஏலவே இருந்த சைவ மகாஜனா மகா வித்தியாலயத்தையும், அமெரிக்க மிஷன் தமிழ்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**மு. திருஞானசம்பந்தபிள்ளை,**
*அதிபர், இணுவில் மத்திய கல்லூரிச் சமூகம் சார்பாக.*

## பெரியோரின் ஆசித்துளிகள்......

திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விச் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துத் திறம்பட அயராது பணிபுரிந்து வருகிறார். இதனை யாலருமறிவர். நிறைவான இறைபக்தி, ஆடம்பரமில்லா வாழ்க்கை, இன்முகம் காட்டி எல்லோரையும் உபசரிக்கும் உயர்வான பண்பு, மனங்கவர் அன்பான பேச்சு, இவைகளால் எல்லோர் உள்ளங்களிலும் தனி இடம் கொண்ட கல்விமான். இவர் இன்னும் அதிவயதுக்கான விழாக்கள் கண்டு சகல செல்வபோகமிக்க பெருவாழ்வு வாழ்ந்து இன்புறப் பரம்பொருளின் திருவருளை வேண்டி அவரை உளமார ஆசிர்வதிக்கின்றேன்.

*நல்லைக் குருமகா சந்நிதானம்,*
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

சிறந்த கல்விமானாக, தொண்டனாக, நிர்வாகியாக, அவர்கள் வழங்கிவரும் பணிகள்; இன்றைய காலகட்டத்தில் எமது சமூகம் எதிர்நோக்கியுள்ள. தேவைகளுக்கும், அறைகூவல்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடியனவாக இருப்பதை அறிந்து உவகை கொள்கின்றோம் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இறைவன் அருள் கிடைக்க வேண்டுமென ஆசிர்வதிக்கின்றேன்.

**வண. கலாநிதி எஸ். ஜே இம்மானுவேல்**
*யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்.*

அவருடைய புத்திசாதுர்யமும், குதூகல உணர்வும், நகைச்சுவைப் பேச்சும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவருடைய முகத்தில் சோகத்தின் ரேகையைக் காண முடியாது ஒரு வாலிபனுடைய வேகமும், உற்சாகமும் அவரிடத்திலுண்டு. எல்லோர்க்கும் பிரியமான "சுந்தா" அவர்களுக்கு சந்தோஷமும், உற்சாகமும் என்றும் குறையாமல் இருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. அவர் மனைவி மக்களுடன் பல்லாண்டு இன்பமாக வாழ்வாராக.

*தென்இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீன முதல்வர்*
**வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்**

புன்னகை தவழும் இன்முகமும், நகைச்சுவை ததும்பும் இன்னுரையும், எடுப்பானதும் சாந்தமானதுமான இனிய தோற்றமும் உடைய இவருக்கு முத்தமிழ் வல்லார் என்றே பெயர்சூட்டிவிடலாம். இசையிலே ஈடுபாடு; நாடகப்புலமை, இயற்றமிழ் வன்மை மூன்றையும் இப்பெரியாரிடத்தில் காணலாம், இப்பெரியாரின் மணிவிழா சிறப்புற அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

*துர்க்காதுரந்தரி*
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

ஆழ்ந்த புலமையும் இசை அறிவும், இறைபக்தியும் நிரம்பப் பெற்றவர். தாம் பிறந்த மண்ணுக்குப் பெருமை அளிப்பவர். ஈழக்கல்வியுலகிற்கு அளப்பரிய சேவை ஆற்றியவர், ஆற்றி வருபவர். செயற்கரியன செய்து தனது பணியினைக் கடமையுணர்வுடன் செய்து வரும் அவர்களின் பணி தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*யாழ். அரச அதிபர்*
**திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள்**

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் பரீட்சைத் திணைக்களத்திலும் பின்னர் கல்வித் திணைக்களத்திலும் திறமையுடன் பணியாற்றி நிரம்பிய அனுபவம் பெற்றவர். கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் காலத்தில் கல்வித் துறை நிறுவனங்களுக்குத் தாமாகவே முன்வந்து நன்கொடை வழங்கும் பரோபகாரியாக அவர் விளங்கியுள்ளார்.

நமது பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர் என்ற வகையிலும் அவரது பங்களிப்புகள் கணிசமானவை. தமது கல்வித்துறை அனுபவங்களின் துணையுடன் அவர் வழங்கிய ஆலோசனைகளின் பொருட்டும், கருத்துரைகளின் பொருட்டும் நமது நிறுவனத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அவரது மணிவிழா சிறப்புடன் நடைபெறுவதாக என்று வாழ்த்துகிறேன்.

*யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்,*
**பேராசிரியர் அ. துரைராசா அவர்கள்**

## வாழ்க பல்லாயிரத்தாண்டு!

இணுவையூர்க்கென ஏற்றமிகு இணுவில் மத்திய கல்லூரி அணிபெறத் தந்த எம் மண்ணின் மைந்தன் "சுந்தர்" மணிவிழா கண்டு மேலும் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபை
இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## நன்றி

இணுவை மக்களின் சார்பில இப் பத்திரிகைச் சிறப்பு மலர் இணுவை மத்திய கல்லூரியினால் பிரசுரிக்கப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தினைத் தந்த மணிவிழா அமைப்புக் குழுவினருக்கும், ஆசியுரை வழங்கிய பெரியோருக்கும், பாமாலைகளை யாத்த பாவலர்களுக்கும், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்,
கல்லூரிச் சமூகம்,
இணுவில் மத்திய கல்லூரி.

குறிப்பு:
இணுவில் நாதஸ்வரக் கலைஞர்களும், தவில் வித்துவான்களும் இன்றைய விழா ஊர்வலத்தில் பங்குபற்றி மங்கள இசை வழங்குவார்கள்.

## உயர்வு பெற்றே வாழி!

கலைவாணி அருள்பெற்ற கல்வியாளன்
கல்விகலை வாழவழி வகுத்த செம்மல்
நிலையான கல்விகலைச் செல்வமொன்றே
நீணிலத்தில் நிலைக்கவரும் நெறியில் நின்றோன்
மலைபோலக் கருணைமிகும் நெஞ்சகத்தான்
மன்னுநகர் இணுவை தரு பெரியோனாவான்
தலையாய மணிவிழாவும் தழைத்து வாழி!
தலைவன் சுந்தரலிங்கம் நீடு வாழி!

தருவதோர் சுவைசேர் பேச்சால் ஏறும்
சபையெலாம் ஈர்த்து நின்று இன்றும்
இருபதே வயதடைந்த இளைஞன்போ லோடியாடி
இணையறு பணிகள் ஆற்றி வாழ்வில்
அறுபதே வயதடைந்து அழகுறு மணிவிழாவைக்
காணும் இரா. சுந்தர லிங்கம் இன்னும்
ஒருபத்தே நூறு ஆண்டு உலகில்
ஒப்பிலா உயர்வைப் பெற்றே வாழி!

நெருக்கடிகள் மத்தியிலும்
நெஞ்சுரத்தினோடு
பெருக்கி வடமாநிலத்தில்
பீடுறவே கல்வி
திருத்தமுறச் சேவை செய்த
செம்மை நினைக் கின்றோம்
பொருத்தியிரு கரம் வணங்கிப்
போற் மெங் கல்லூரி.

*வாழ்த்திப் போற்றுவோர்:*

**அதிபர், ஆசிரியர். மாணவர்,**
இணுவில் மத்திய கல்லூரி.

(விளம்பர இல: 25544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாத தாரா குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஐயனார் கோவிலடி, இல. 54 (16, ராதா ஒழுங்கை, வண்ணார்பண்ணை.
(6154)

### உடன் விற்பனைக்கு

ஹைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்
(25534)

### தேவை

அரச சேவையினின்றும் ஒய்வு பெறும் தனி ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமும் தங்குவதற்கேற்ற இடம் முடியுமாயின் மதிய உணவுடன் தேவை. 901, மே/பா உதயன், யாழ்ப்பாபாணம்.
(6155)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும், .04, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(6153)

### பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K. V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(25537)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதை தகுந்த ஆதாரம் காட்டி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். குமரன் பலசரக்கு மாளிகை, பலாலி றோட் திருநெல்வேலி சந்தி.
(25553)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உபயோகிப்பதற்கு 5 KVAக்கு மேற்பட்ட வலுவுள்ள தனி அவத்தை/மூன்று அவத்தை (Phase) மின்பிறப்பாக்கிகள் வாடகைக்கு தேவைப்படுகின்றன.

வைத்திருப்போர் 1993 - 05 - 11 பிற்பகல் 2.00 மணிக்கு பல்கலைக் கழகத் துணைவேந்தருடன் தொடர்பு கொள்ளவும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
த.பெ இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
(சி-5090)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 95 A/L பிரிவு - 2

ஆரம்பமாகிவிட்டது.

(சனி, ஞாயிறு)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு;

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — | கலாகரன் | 10 - 11 |
| வர்த்தகம் | — | தேவா | 1 - 2 |
| கணக்கியல் | — | S. K. பிரபாகரன் | 12 - 1 |
| அளவையியல் | — | விக்கி | 9 - 10 |
| தமிழ் | — | குழந்தை | 4 - 5 |
| இந்து நாகரிகம் | — | காரை சுந்தரம்பிள்ளை | 1 - 2 |
| இந்து சமயம் | | | 10 - 11 |
| புவியியல் | — | குணராஜா | 11 - 12 |
| அரசியல் | — | ஜெயகாந்தன் | 9 - 10 |
| வரலாறு | — | சிறீதரன் | 1 - 2 |

★ 95 ஆம் ஆண்டுக்கு இவ்வருடம் பிரிவு III மட்டுமே ஆரம்பமாகும்.

★ அனுமதிகளுக்கு முந்துங்கள்.

(சி 4983)

---

உ

திருநெல்வேலி அரசடி

ஸ்ரீசிவகாமசுந்தரி அம்மன் கோயில்

## பூங்காவன விஞ்ஞாபனம்

காலம்:- 09-05-1993 ஞாயிற்றுக்கிழமை

பகல் 11-00 மணியளவில் விஷேச அபிஷேகம்

பகல் 12-00 மணியளவில் மகேஸ்வர பூஜை

மாலை 06-00 மணியளவில் ஸ்ரீ மீனாட்சி-சுந்தரேசர் திருக்கல்யாணம்

இரவு 08 00 மணியளவில் வீதிவலம் வருதல்

இரவு 09-00 மணியளவில் சொற்பெருக்கு
கம்பவாருதி, திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர் கம்பன் கழகம்)

இரவு 10-00 மணியளவில் நாதஸ்வரக்கச்சேரி
S. பெருமாள் குழுவினர் (தேவஸ்தானம்)
S சந்தானம் குழுவினர்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. M. பஞ்சாபிகேசன் | திரு K. R புண்ணியமூர்த்தி |
| திரு. N K பத்மநாதன் | திரு T. உதயசங்கர் |
| திரு. S. சிதம்பரநாதன் | திரு P. முருகதாஸ் |
| திரு. R. கேதீஸ்வரன் | திரு. K நித்தியானந்தன் |
| திரு. M. P. நாகேந்திரன் | திரு R. S. ரவீந்திரன் |
| | திரு R. S. சுதாகர் |

இரவு 01-00 மணியளவில்

### இன்னிசை வார்ப்புகள்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
எஸ். ஜீ. சாந்தன் குழுவினர்

இங்ஙனம்:
திருநெல்வேலி இளைஞர்கள்

பிரசுர அன்பளிப்பு: ஆறுமுகம் சிற்பாலயம், காளிகோயிலடி, திருநெல்வேலி.

(சி-5092)

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இறப்பு: 03 — 05 — 1988



திதி: 07 — 05 — 1993

### அமரர் செல்லையா இராசரத்தினம்

நினைவு கூரும்:
தம்பி- செ. கணபதிப்பிள்ளை,
(சட்டத்தரணி)

மீசாலை,
தெற்கு.

---

யாழ். மாநகரசபைக்கு

## சிமெந்து எடுத்து வருவதற்கு கூட்டுபடை அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் மாநகரசபையின் கட்டட திருத்த வேலைகளுக்காக 500 பக்கட் சிமெந்தைக் கப்பலில் இங்கு எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்து விட்டது.

நல்லூரில் அமைந்திருக்கும் மாநகரசபையின் கட்டடங்களை புனரமைப்பதற்கும், வேறு தேவைகளுக்குமாக குறைந்த பட்சம் 500 பக்கட் சிமெந்தை வழங்கும்படி யாழ். மாநகரசபை ஆணையாளர் புனர் வாழ்வு அமைச்சைக் கேட்டிருந்தார் ஆனால்—

புனர் வாழ்வு அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கிய போதும் கூட்டுப்படைத் அனுமதி மறுத்துவிட்டது
(த-17)

### பிணை முறிப்படிவம்

1991, 1992 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் கல்வியைப் பூர்த்தி செய்துவிட்டுப் பாடசாலைகளுக்குச் சென்றவர்களில் பிணைமுறிப் படிவம் பெற்றுக் கொள்ளாதவர்கள் தமக்குரிய படிவத்தை எதிர்வரும் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் கையொப்பமிட்டு உப அதிபர் திருமதி சி இராமநாதனிடம் பெற்றுக்கொள்ளலாம் என கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அறிவித்துள்ளது.
(க)

## புலிகளை இனங்காண்பதில் ஈ.பி.டி.பி. உதவவில்லையாம்

### பொலீஸ் மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, மே. 7

கொழும்பு நகரினுள் ஊடுருவல் செய்யும் விடுதலைப்புலிகளை அடையாளங் காணுவதில் பொலீஸாருக்கு ஈ பி. டி. பியினர் உதவி வந்தனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேனகூரே விடுத்த அறிக்கைக்கு பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்

திரு கூரே விடுத்த அறிக்கை பற்றி தெளிவுபடுத்த வேண்டும் என பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் பொலீஸ் மா அதிபர் கோரியிருக்கிறார்.

வட பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரச படையினருடன் போராடும் ஈ பி டி யினர் கொழும்பில் விடுதலைப் புலிகளை அடையாளங் காட்டுவதில் பொலீஸாருக்கு உதவியாக உள்ளனர் என்று திரு கூரே தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

திரு கூரேயின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பொலீஸ் மா அதிபர்—

தேர்தல் காலத்தில் ஈ. பி. டி. பியினரை கொழும்பில் இருந்து வெளியே அனுப்ப வேண்டும் என்றும்—

தேர்தல் முடிந்த பின்னர் ஈ. பி. டி. பியினரை திருப்பிக் கொண்டு வரும் பட்சத்தில் அவர்களை கொழும்பு, பார்க் வீதி கட்டடத்தில் தங்க வைக்கக்கூடாது என்றும் மட்டுமே தான் கூறியதாக பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
(த-எ)

### வடமாநிலக்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலவன் பாடசாலையையும் ஒன்றிணைத்து இணுவில் மத்திய கல்லூரி என்ற பெயரில் 1992 - 05 - 30 ஆம் திகதி நிர்வாக முறைப்படி உருவாக்கித் தந்துள்ளார். இதனால் இணுவையூரையே இணைத்த ஊராண்மையுடையரானார்.

மணிவிழா நாயகர் தம் குடும்பத்துடன் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்,

---

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி

## வாழ்த்துகின்றது

### மணி விழாக் காணும்

வடமாநில கல்வி அதிபதி

### உயர்திரு இரா. சுந்தரலிங்கம்

அவர்களை

பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(25550)

---

## ★ மணி விழா ★

இன்று மணி விழாக் காணும்
யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,

### மாண்புமிகு இரா. சுந்தரலிங்கம்

அவர்கள்

கல்வியுலகின் ஒளிவிளக்காய் என்றும்
✶ மிளிர வாழ்த்துகிறோம் ✶

மணிவிழாக் காணுகின்ற மான்புறுசுந் தரலிங்கப்
பணிவுளாய் நாணலேபோற் பணிசெயப் -
பல்லோர் ஏத்தும்
அணிவிழா இன்று! என்றும் ஆலின்நல் அறுகாய் உற்ற
துணிவுளாய் தூயா உந்தன் தொல்பணி-
மேன்மேல் வெல்க!

— யாழ். கல்வித்திணைக்கள நலன்புரிக்கழகம்.

(25546)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஒரு நிழலில் நிற்கும் டி. பி.

பிரேமதாசாவின் மரணத்தினால் அதிர்ஷ்டம் பெற்றவர்களில் டிங்கிரி பண்டா விஜேதுங்கா முதன்மையானவர். அவர் நினைத்தும் பார்க்காத நாட்டின் மிக உயர்ந்த பதவி அவரைத் தேடி வந்துள்ளது. இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் திரு. விஜேதுங்காவே அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவது அனேகமாக நிச்சயமாகி விட்டது.

இலங்கை இதற்கு முன்னர் கண்டிராத மிகுந்த நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் அவர் உயர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுகிறார். பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிவான போது ஜே. வி. பியின் வன்செயல் நெருக்கடி ஒன்று மட்டுமே இருந்தது. ஆனால் இப்போது ... தென்னிலங்கைக்குள்ளேயே பல முனைகளில் நெருக்கடிகள் அரசியல் அம்புகளாக நீட்டியபடி நிற்கின்றன. பிரேமதாசா சாதுரியமாகக் கடத்தி வந்த இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் விவகாரமும் தெற்கின் பல முனை நெருக்கடிகளுக்கும் சமமானதாக அடுத்த பக்கத்தில் குத்திட்டு நிற்கிறது.

ஜனாதிபதி பதவியை எதிர்பார்த்திருக்காமல், அதன் மீது கண் வைத்திருக்காமல் தானும் தன்பாடுமாக இருந்தவர் டி. பி.

அதிகாரம் குறைந்த பிரதமர் பதவி கூட இவருக்கு எதிர்பாராமல் கிடைத்த ஒன்றே. காமினி திசநாயக்காவும், லலித் அத்துலத் முதலியும் ''அடிபட்ட'' அந்தப் பதவிக்கு, அவர்கள் இருவரையும் பின் தள்ளுவதற்காக பிரேமதாசாவுக்கு அகப்பட்டவரே விஜேதுங்கா. தான் காலால் இடும் கட்டளையை தலையால் செய்யக்கூடிய, என்றைக்குமே ஆபத்தில்லாத பேர்வழி என்று கருதியே பின்னால் இருந்த டி. பி. யை முன்னுக்குக் கொண்டு வந்தார் பிரேமதாசா!

எனவே —

நாட்டின் உயர் பதவி கிடைத்ததும் டி. பி. தனது சொந்தத்தில் விவகாரங்களை கையாளுவாரா? அதற்கான ஆற்றலும் ஆளுமையும் அவரிடம் புதிதாக உண்டாகுமா? எரிமலை போல குமுறிக் கொண்டிருக்கும் அமைதியின்மையையும், வன்செயல்களையும் அடக்கிவிடும் வல்லமையையும், அதற்கேற்ற தான விவேகத்தையும் வளர்த்துக்கொள்வாரா?

இத்தகைய கேள்விகள், அவர் ஜனாதிபதியாகத் தெரிவாகும் இன்று எல்லோரது மனங்களிலும் எழுவது தவிர்க்க முடியாததாகும். ஜனாதிபதி ஆசனத்தில் ஏறியதும் திறமை, ஆற்றல், ஆளுமை என்பன அவரை அறியாமலே வளர்ந்து விடக் கூடும்.

ஆனால் ஒன்று. டி. பியை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று தலைமைத்துவ வெற்றிடம் கொண்ட ஆளுங்கட்சி ஏகமனதாக முடிவுசெய்ததை ஊன்றி நோக்க வேண்டும். இந்தியாவிலிருந்து அவசரமாகத் திரும்பிய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். இதன் பின்னணியில் நின்றார் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனாதிபதி ஆசனத்தில் ஏறியதும் டி. பிக்கு ''உஷார்'' ஊறுகிறதோ இல்லையோ, அவரை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே ஆட்டுவிக்கப் போகிறார்! டி. பி. ஆடுபவராகவும், ஜே. ஆர். ஆட்டுவிப்பவராகவும் இருப்பார்கள்.

பிரேமதாசா தனக்கு ஆபத்தோ தொல்லையோ தரக்கூடியவர் அல்லர் என்று கருதி தனது கைப்பொம்மையாகத் தெரிவு செய்வதற்கு முன்னர், ஜே. ஆரின் நெருங்கிய விசுவாசியாக இருந்தவர் விஜேதுங்கா. நான்கு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும், உயர்ந்த ஆசனத்தில் இருந்துகொண்டு ஜே. ஆரின் எண்ணங்களை நிறைவேற்றப்போகிறார். ஜே. ஆர். நிழலில்நின்று செயலாற்றப்போகிறார்.

அடுத்த பக்கமாகச் சொல்வதானால், நான்கு வருட இடைவெளியின் பின்னர் திரை மறைவில் நின்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் நாட்டை ஆளப்போகிறார்.

புலிகளிடமிருந்து

# தொப்பிகல காட்டுபகுதியை மீட்பது இயலாத காரியம்

## இராணுவத் தலைமைப் பீடம் தெரிவிப்பு

கொழும்பு, மே. 7

'இலங்கை இராணுவ வரலாற்றிலேயே நீண்டகால தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கை தொப்பிகல காட்டுப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனாலும் தொப்பிகல காட்டுப் பகுதியை புலிகளின் பிடியில் இருந்து கைப்பற்றிக் காப்பாற்றுவது இயலாத காரியமாகும்.

இராணுவத் தலைமைப் பீடம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

தொப்பிகல காட்டுப்பகுதியை இராணுவம் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது சாத்தியமா? என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையிலேயே மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது:

அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய தகவல் வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் இருக்கும் புலிகளின் கோட்டை எனக் கருதப்படும் தொப்பிகல காட்டுப் பகுதியை பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும் இராணுவ கமாண்டோக்கள் கடந்த பல மாதங்களாக கடிரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தொப்பிக்கல காட்டுப்பகுதியிலேயே விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தலைமையகம் அமைந்திருப்பதாக இராணுவ தலைமையகம் கருதுகிறது.

சித்தாண்டி, சந்தி வெளிப் பகுதியை அண்மித்து இந்த காட்டில் எல்லை ஆரம்பிக்கின்றது.

தொப்பிகல காட்டுப் பகுதியை இராணுவத்தினர் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டால் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பலத்தை வேரோடு சாய்த்துவிட முடியும் என இராணுவ உயர்பீடம் நம்பி செயலில் இறங்கியுள்ளது.

கடந்த மாதத்தில் 30 நாட்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தினர் சாதனை ஒன்றையும் புரியவில்லை என இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தொப்பிகல காட்டுப் பகுதியில் முகாமிட்டிருக்கும் படையினர் இன்னும் முற்றாக காட்டுக்குள் செல்லவில்லை என்றும் —

காட்டுக்குள் பூரணமாகச் சென்றாலும், நிரந்தரமாக அங்கு தங்கியிருக்க முடியாது திரும்பி வந்தேயாக வேண்டும் என்றும் — இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு உணவு மற்றும் ஏனைய தேவைகளை வழங்க கூடிய போக்குவரத்து வசதிகள் இல்லை. தவிரவும் புலிகள் எப்படியும் அவர்கள் மீது தாக்குதல்களை தொடுப்பது திண்ணம் என இராணுவ உயர் அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர் — என்று அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-3)

### ஆலயங்களில்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு திருவீதியுலாவுடன் ஆரம்பமாகும். இரவு 8 மணிக்கு வீ. கே. கானமூர்த்தி, வீ. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், இரவு 9-30 மணிக்கு ராஜன்ஸ் இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

(க)

o o o

நீர்வேலியூர், கோவையூர் உரும்பராய் கிழக்கு திருக்கரந்தனூர் அருள்மிகு சிவபூதநாதேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 21 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(க)

o o o

வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்று வந்த திருமுறைப் பாராயணத்தின் பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அக்கினி நாளை முன்னிட்டு இன்று முதல் 21 நாட்கள் தினமும் காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும்.

(க)

### கல்வி டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம், மே 7

நாளையும் நாளை மறுதினம் 9 ஆம் திகதியும் நடைபெறவிருந்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா பகுதி ஒன்றுக்கான பரீட்சைகள் பின்போடப்பட்டுள்ளன என்று யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் —

படிப்பு லீவில் நிற்கும் ஆசிரிய மாணவர்கள், தங்கள் கடமைகளை எதிர்வரும் திங்கள் முதல் ஏற்றுக்கொள்ளுமாறும் பின்னர் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை பரீட்சைக்கு தோற்ற வசதியாக அவர்களுக்கு லீவு வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(இ-5)

### சுகவாழ்வு விரிவுரை

யாழ்ப்பாணம், மே 7

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடரின் ஆறாவது அமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற உள்ளது.

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த அமர்வில் ''பாதுகாப்போம்; புற்று நோய், எய்ட்ஸ்'' எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனும், 'தாய் நலம்' எனும் தலைப்பில் மாதர் நோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி வி. கருணாகரன் அவர்களும் விரிவுரைகளை நிகழ்த்துவார்கள்.

(ச)

# வவுனியா, திருமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, மே 7

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து வவுனியா, திருமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்கள் எங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிய தமிழர்கள் பலர் வவுனியாவை நோக்கி வந்து கொண்டிருப்பதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நகர வீதிகள் எங்கும் பாதுகாப்புத் தடைகள் போடப்பட்டுள்ளன. வீதிகளில் வெள்ளைக் கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன.

இதேவேளை — ஜனாதிபதி கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து திருமலை நகரிலும் சனநடமாட்டமும், வாகனப் போக்குவரத்தும் குறைந்து காணப்படுவதாகவும், நகரின் பிரதான சந்திகளில் அதிக எண்ணிக்கையான பொலீஸார் காவல் கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி படுகொலை செய்தி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்புப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. அங்கிருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

கடந்த ஞாயிறு இரவு முதல் நகரில் பொலீஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நண்பகலுக்குப் பின்னர் நகரில் சனநடமாட்டம் குறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனியன்று இரவு மட்டக்களப்பில் இருந்து மேலதிகமாக இராணுவத்தினர் விமான மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்.

(த-5)

### மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 7

இதுவரை மீட்பு நிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையும் நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் செலுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது.

(ஒ)

### நாளை

யாழ்ப்பாணம், மே. 7

யாழ். றோட்டறிக் கழகம் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்திய பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் திருமதி சுகுணா ராஜேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி மிதிலா விவேகானந்தனின் இன்னிசைக் கச்சேரியும் அங்கு நடைபெறும்.

(ஓ-5)

### விபத்தில் பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 7

சைக்கிளில் வந்த இளம் பெண் ஒருவர் லொறியினால் மோதுண்டதில் தலை நசியுண்டு மரணமானார்.

நேற்று நண்பகல் மானிப்பாய் சந்தைக்குச் சமீபமாக இச்சம்பவம் நிகழ்ந்தது.

சுந்தரம் ஜெயராணி (வயது 18) என்பவரே இறந்தவர் ஆவார்.

காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த இப்பெண், கொக்குவிலில் வேலைசெய்யும் தனது சகோதரிக்கு உணவு எடுத்துச் சென்ற சமயம் இந்த விபத்து ஏற்பட்டது.

[இ-90-15]

### நாட்டுக்கூத்து விழா

குருநகர், மே 7

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் இடம்பெறும் மூன்று நாள் நாட்டுக் கூத்து விழா இன்று (வெள்ளி) மாலை 6-45 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இன்றைய முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தலைமை வகிப்பார்.

சிறப்புரையை திரு. பா. அமிர்தநாயகம் (முல்லைக் கவி) ''ஈழத்து தமிழ்க் கூத்து'' என்னும் தலைப்பில் நிகழ்த்துவார்.

நாட்டுக் கூத்துக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியை தொடர்ந்து அருட்திரு பி. எம். இம்மனுவேல் அடிகளார் நெறியாள்கையில் புனிதபாகப்பர் மகளிர் மன்றம் வழங்கும் ''இலங்கேஸ்வரன்'' கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் வழங்கும் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையின் ''பஞ்சாலி சபதம்'' ஆகிய இரு நாட்டுக் கூத்துகளும் மேடையேற்றப்படும்.

(இ-51)

### இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஞாபகார்த்த தினம் நாளை மே எட்டாம் திகதியாகும்.

அதனை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள செஞ்சிலுவைப் பிரிவுகளைச் சேர்ந்த தொண்டர்கள் இரத்ததானம் வழங்கவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை செய்துள்ளது. செஞ்சிலுவைத் தொண்டர்கள் மட்டுமன்றி இரத்ததானம் செய்ய விரும்பும் ஏனையோர் யாழ். கிளையுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

### வவுனியாவில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், மே 7

வவுனியா, நொச்சிமோட்டையில் நேற்று முன்தினம் புதன காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

தமது காவல் அரணுக்கு முன்னால் வேலையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

(ஓ 5)

### ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பாவனையாளர்களுக்கு குடும்ப அட்டைக்கு 2 கிலோ சீனியும் 2 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்படும். சீனி கிலோ 27 ரூபா 50 சதமாகவும், மண்ணெண்ணெய் 15 ரூபாவாகவும் விநியோகிக்கப்படும்.

இன்று யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் திறந்து விய பாரம் நடக்கும் என அறிவிக்கப்படுகிறது.

(அ)

### மலேரியா தடுப்பு வேலைகள்

யாழ்ப்பாணம், மே 7

மலேரியா தடுப்பு இயக்கத்தினரின் வேலைகள் பன்முகப்படுத்தப்படவுள்ளன. இதன் பிரகாரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதிகளிலும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இப் பன்முகப்படுத்தப்படும் நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கடந்த புதன்கிழமை முதல் 3 நாட்களுக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மத்திய மருந்துக் களஞ்சியத்தில் மலேரியா நோய் சம்பந்தமான தொடர் விரிவுரைகள் வழங்கப்படுகின்றன. யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு இயக்க அத்தியட்சகர் டாக்டர் கே. சிவகுரு இவ்விரிவுரைகளை நிகழ்த்தி வருகிறார்.

(த-162)

### கடும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

சுதந்திர சதுக்கத்தில் மிக விழிப்புடன் இராணுவத்தினர் செயற்பட்டனர். சுற்றியுள்ள கட்டடங்களின் கூரைகளில் ஆயுதந்தரித்த விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கைகளை மிக உன்னிப்பாகக் கண்காணித்தபடி இருந்தனர். நகரையண்டிய கடலில் கடற்படையினரின் ரோந்துப் படகுகள் தயார் நிலையில் இருந்தன.

பூதவுடல் சுதந்திர சதுக்கத்தை அடைந்தவுடன் சமயக்கிரியைகள் ஆரம்பமாகின. அதை அடுத்து இரங்கலுரைகள் இடம்பெற்றன. முதலில் நான்கு மதங்களின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்தினர். அவர்களைத் தொடர்ந்து ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இரங்கலுரையை ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாச வாசித்தார். பின்னர் பங்களாதேஷ் பிரதமரும் சார்க் தலைவருமான பேகம் காலிதா ஸியா, கொழும்பு மேயரும் சுசரித்த இயக்கத்தின் செயலாளருமான ரட்ணசிறி ராஜபக்ஷ, பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஆகியோர் இரங்கல் உரைகளை நிகழ்த்தினர்.

இறுதியாக ஜனாதிபதியின் குடும்பத்தின் சார்பாக அவரது மனைவி ஹேமா பிரேமதாஸ விம்மி அழுதபடி நன்றியுரை ஆற்றினார்.

அதை அடுத்து மனைவி ஹேமாவும் மகனும், மகளும், மருமகனும் தங்கள் இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர். தொடர்ந்து பூரண சீருடை அணிந்த இராணுவ அதிகாரிகள் அறுவர் பேழையைத் தூக்கி வந்து சிதைக்கருகில் வைத்தனர். இராணுவ ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து மலர் தூவியபடி இருந்தது. அவ்வேளை பூரண இராணுவ மரியாதை செலுத்தப்பட்டது.

சிப்பாய்கள் பேழையைச் சுற்றியிருந்த தேசியக் கொடியை அகற்றி எடுத்துவிட்டு பேழையைத் தூக்கிச் சிதையின் மீது வைத்தனர். ஒருபுறம் பாண்ட் வாத்தியங்கள் ஒலிக்க மறுபுறம் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இறுதி ஊர்வலப்படையினரும் அணி வகுத்துப் பூரண இராணுவ மரியாதையைச் செலுத்தினர். இரவு 7.'0 மணிக்கு ஜனாதிபதியின் மருமகன் றோகன் ஜயக்கொடி சிதைக்குத் தீமூட்டினார். பிரேமாவின் பூதவுடல் தீயுடன் சங்கமமானது.

(ஓ-6 5)

# யாழ். வன்னி தொடர்புச் சேவை: நடைமுறை விவரங்கள்!

யாழ்ப்பாணம், மே 7

நெருக்கடி கால யாழ்-வன்னி தொடர்பு சேவை தொடர்பான நடைமுறை விவரங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

அது பற்றிய முழுவிவரங்களும் வருமாறு;

இச்சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்தில்), கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும்.

செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும், மாலை 1-30 தொடக்கம் 5-00 மணி வரையும் இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களைக் கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்தி செய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

#### சலுகை அடிப்படையிலான தகவல்கள்

பாரதூரமாக நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் சலுகை அடிப்படையிலான தகவல்களாகக் கொள்ளப்படும். வைத்திய அதிகாரி அல்லது குறிப்பிட்ட பிரதேசச் சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராமசேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

15க்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15உம், மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2உம் அறவிடப்படும்.

குறிப்பு:

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிக்கும், மரண அறிவித்தல் செய்திகளையே சாதாரண தகவல்களாக ஏற்றுக்கொள்வதாக இருப்பினும் மேற்குறிப்பிட்டுள்ளோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருக்க வேண்டும்.

#### வியாபாரத் தகவல்

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்கள் இக்குறிப்பிட்ட வகையில் அடங்கும் முதல் பத்து சொற்களுக்கும் ரூபா 100உம், மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15உம் கட்டணமாக அறவிடப்படும்.

#### வழமையான தகவல்

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத் தகவலிலும் வியாபாரத்தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்படும்.

முதற்பத்து சொற்களுக்கு ... மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

#### விநியோக வகைகள்

*சாதாரண விநியோகம்*

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணிநேர இடைவெளிக்குள் அவ்வப்பகுதித் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில கையளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும்.

*விரைவு விநியோகம்*

இது தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியின் தபால் ஊழியரின் ஒத்துழைப்புடன் ''நேரடியாக'' விநியோகிக்கப்படும் விரைவு விநியோகத்திற்காகச் சாதாரண கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

குறிப்பு:

★ வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டி வீதியை மையமாகவைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளிற்கும் குஞ்சுப்பரந்தன் இறங்குதுறைப் பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்.

★ தெளிவில்லாத முகவரிகள், தகவல் விவரங்கள் என்பனவற்றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பனவற்றினால் ... விநியோகம் ... பொறுப்பேற்க முடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களிற்காகத் தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம்.

★ வன்னிப்பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனை நிலைய கருமபீடத்தையும், கிளிநொச்சி அலுவலகத்தையும் முகவரியாக அமைத்துத் தகவலை அனுப்பலாம். உரியவர் தன்னை உரிய ஆவணத்தினூடாக அடையாளம் காட்டிக கோரும்பட்சத்தில் தகவல் வழங்கப்படும்.

★ கட்டணங்கள் யாவும் பணமாகவே செலுத்தப்பட வேண்டும்.

★ விரைவு விநியோகத்திற்காகத் தகவல்களை ஒப்படைப்பவர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்படைக்கும்போதே பதில் தகவல் பெற்று அனுப்பப்படும்.

★ தகவல் விநியோகப்படிவத்தினை ரூபா 1 கொடுத்துப் பரவலாக எல்லா இடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

★ எல்லாத் தகவல்களும் தமிழ் மொழியில் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

★ தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதி அட்டையோ காட்டித் தன் அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

நாளை

**மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி**

யாழ். ரமணனின் இசையமைப்பில்

**"ராஜன்ஸ்" குழுவினர்**

வழங்கும்

★ **இன்னிசை கானம்** ★

காலம்: நாளை சனிக்கிழமை இரவு 8 மணி

இடம்: கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய திறந்தவெளியரங்கு.

விளம்பர அன்பளிப்பு:

அரியாலை அரிசி ஆலை,
418 நாவலர் றோட்,
மாம்பழம் சந்தி, அரியாலை.

(25551)


# தற்கொலையாளியின் துண்டிக்கப்பட்ட தலை

ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலைக்குக் காரணமான தற்கொலையாளி எனப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட நபரின் துண்டிக்கப்பட்ட தலை படத்தில் காணப்படுகிறது. குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் இந்தத் தலை கண்டு பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.





கொழும்பு மே தினக் குண்டு வெடிப்பில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் சடலத்தை படையினர் ஜீப் ஒன்றில் ஏற்றுவதை படத்தில் காணலாம். தலைவேறு, கை, கால்கள் வெவ்வேறாக ஜீப்பில் தூக்கி வைக்கப்படுகின்றன.



மே தினக் குண்டு வெடிப்பினால் உயிரிழந்த பலரின் அவயவங்கள் நாலாபுறமும் சிதறி தூக்கி வீசப்பட்டன. அப்படி வீசப்பட்ட ஒருவரின் காலை பொலிஸார் இழுத்து வருவதையும், வீசப்பட்ட மற்றும் இரு கால்களை அடுத்த படத்திலும் காணலாம்.





குண்டு வெடிப்பில் உயிரிழந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் சடலத்துக்கு அருகில் கிடந்த சைக்கிள் இது தான். சைக்கிளுக்கு அருகில் 14 வயதுச் சிறுவன் ஒருவனின் சடலம் காணப்படுகிறது. இந்தச் சைக்கிளுடன் வந்த சிறுவன்தான் குண்டை எடுத்து வந்தான் என முதலில் அறிவிக்கப்பட்டது.

# மன்னார், முல்லைத்தீவிலும் புதன் விமானக் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், மே 7

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரு இடங்களில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

அதே தினம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

காலை 8.20 மணியளவில் மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் எவ் 7 ரகத்தைச் சேர்ந்த இரு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. அப்பகுதியில் நான்கு குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

அன்றைய தினம் மு.ப.கல் 10.30 மணியளவில் பெரிய குஞ்சுக்குளம் பகுதியிலும் விமானத் தாக்குதல் இடம் பெற்றது.

அப்பகுதியில் வீசப்பட்ட நான்கு குண்டுகளினால் நான்கு வீடுகள் சேதமடைந்ததாகவும்—மேலும் பல வீடுகள் சிறு சேதங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்திவு மாவட்டம் செம்மலை கரையோரப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் மூற்பகல் வேளை இரு புக்காரா விமானங்கள் மூன்று குண்டுகளை வீசித் தாக்கியுள்ளன. சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(ஒ-5)

## புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான ரகசிய வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடைபெறும்.

ஒரேயொரு நியமனப் பத்திரம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டால், அந்த நியமனத்தில் குறிப்பிடப்பட்ட எம். பி புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக தற்போதைய பதில் ஜனாதிபதி திரு டி. பி. விஜேதுங்கா போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சி சார்பாக எவரும் போட்டியிட முன்வரா விட்டால் இன்றைய கூட்டத்திலே திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(உ-5)

# பிரேமா இறந்த அறிகுறியே இல்லை

## வடக்கு - கிழக்கு சென்று திரும்பிய பி.பி.ஸி. செய்தியாளர் தகவல்

கொழும்பு, மே 7

போர் நடந்துகொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழர்களிடையே ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவு பெரிதாகத் தாக்கம் எதனையும் ஏற்படுத்தவில்லை.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா பகுதிகளுக்கு சென்று விட்டு திரும்பிய பி. பி. ஸி. செய்தியாளர் சியாகோ நுவாஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

"மட்டக்களப்பில் ஓரிரு வெள்ளைக் கொடிகளையே பார்த்தேன். பிரேமதாசாவின் மறைவுச் செய்தி எட்டவில்லையோ என்று எண்ணவேண்டியதாயிற்று" என்று அவர் தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கிய சிங்கள ஆதிக்கமிக்க இராணுவத்தின் செய்கைகளால் அன்றாடம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அல்லல்படும் மக்களிடமிருந்து மறைந்த ஜனாதிபதிக்கு அதிகமாக அனுதாபத்தை எதிர்பார்க்க முடியாது என்பது உண்மை தான். மன்னார்ப் பகுதியிலும் இதே நிலைமைதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

(இ-எ)

# மருத்துவ மாணவனாக கொலையாளி வந்தாராம்

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர், மருத்துவ மாணவன் என்று கூறிக்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு வந்தார் என்றும் —

வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த முதலாளி ஒருவருக்கு உதவியாக அந்த நபர் செயல்பட்டு வந்ததாகவும் அதனால் அந்நபர் அம்முதலாளியின் அன்புக்குப் பாத்திரமானார் என்றும்—

அந்த முதலாளியுடன் கிரிக்கெட் விளையாடுவதிலும் அவர் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரியவருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## 2 தமிழர் கைது

மட்டக்களப்பில் ஆண்டான்குளம் காட்டுப் பகுதிக்கு தேன் எடுத்துவரச் சென்ற இரு தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் ச்சம்பவம் இடம் பெற்றது.

(ஒ 5)

## சுந்தருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானிகள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் இடம்பெறவிருக்கின்றன.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் திரு சுந்தரலிங்கம் தம்பதியினர் பிற்பகல் 4-00 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் இருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்படவிருக்கின்றனர்.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(த-3)

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலமும், கிரியைகளும் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடந்தேறின நகரில் பதற்ற நிலை உண்டாவதை தடுப்பதற்காக நேற்றிரவு பத்துமணி தொடக்கம் இன்று அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

தமிழர்களின் பாதுகாப்பு தகுந்த முறையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகளை பதில் ஜனாதிபதி மேற்கொண்டதாகவும் அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் கொழும்பில் வாழும் தமிழர்கள் எந்த நேரத்தில் ஏது நடக்குமோ என்ற பதற்ற நிலையில் இருந்ததாகவும், நேற்று அனேகர் தமது வீடுகளை விட்டு வெளியேறவில்லை என்றும் தகவல்கள் தெரிவித்தன.

(ஆ-எ-5-6)

## அல்லிப்பளை...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுத்தப்பட்டிருந்த மடப்பள்ளி அறை அத்திவாரத்துடன் பெயர்ந்து பெரும் சேதம் அடைந்தது.

பூசையில் பங்கு பற்றிய 15க்கும் மேற்பட்ட பக்தர்கள் குண்டுவீச்சின்போது ஆலய வீதியில் விழுந்து படுத்து உயிர் தப்பினார்கள். ஆலய அர்ச்சகர் வைரவர் மூலஸ்தானத்தில் பதுங்கிப் படுத்துக்கொண்டதில் மயிரிழையில் தப்பினார்.

பின்னர் பகல் 11.30 மணியளவிலும் இரு புக்காரா விமானங்கள் அப்பகுதியில் வட்டமிட்டுச் சென்றன.

முதல்நாள் இரவு ஹெலி ஒன்று அப்பகுதியில் வட்டமிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-178-3-5-117)


மகளிருக்கான

**டிப்ளோமா**

**"மனைப்பொருளியலும், கைத்திறனும்" பயிற்சிகள்**

★ கேக் ஐசிங்
★ கை வேலை
★ உணவுகள் தயாரித்தல்
★ பூ வேலை

● தையல் பயிற்சி
(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகலவிதமான உடைகள் தைத்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்)

மேற்படி பயிற்சிகள் பயிலும் மாணவிகளுக்கு — இலவச கூந்தல் அலங்காரம், கோலம் வகுப்புகளும் நடைபெறும்.

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

★ பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை நடைபெறும்
★ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை நடைபெறும்.

புதிய சனி, ஞாயிறு பிரிவுகள்
ஆரம்பம்: **16 - 05 - 1993**

புதிய கிழமை நாள் பிரிவுகள்
ஆரம்பம்: **17 - 05 - 1993**

**கலாலயா**

(பல் பயிற்சியகம்)
விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.

(இ-5096)



**இன்று முதல்!** **மூன்று நாட்கள்!**

**திருமறைக் கலாமன்ற அரங்கில்**

**"நாட்டுக்கூத்து விழா"**

<——அங்கே உங்களுக்கு விருந்தாக——>

| வெள்ளி 07-05-93 | சனி 08-05-93 | ஞாயிறு 09-05-93 |
|---|---|---|
| 1. இலங்கேஸ்வரன் (புனித யாகப்பர் மகளிர் மன்றம் — குருநகர்)<br>2. பாஞ்சாலி சபதம் (காரை செ சுந்தரம்பிள்ளை — கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) | 1. "புஸ்ப யாத்திரை"<br>2. "அருச்சுனன் பாசுபதம்" (வட இ. நாடக அபிவிருத்தி...)<br>3. "காத்தவராயன்" (யாழ். கலைக் கூடம்) | 1. "கண்ணகி வழக்குரை" (செ. மெட்றாஸ் மெயில்)<br>2. "பவளக் கொடி" (அரியாலை நாடக சபா)<br>3. "பூதகுமாரி" (திருமறைக் கலாமன்ற — பயிலகம்)<br>4. ... (... சனசமூக நிலையம்) — நாவாந்துறை) |

(சி/5097)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org